**Registered No. M. 408.**

உ

திருச்சிற்றம்பலம்.

# திருநாவுக்கரசு.

## திங்கட்கொருமுறைதோன்றித்திகழ்வது.

# THE THIRUNAVUKARASU.

## PUBLISHED ONCE IN A MONTH.

பத்திராதிபர்—தி. பா. சிவராமபிள்ளை.

புத்தகம் ௨ ] திருநெல்வேலி: விச்வாவசுஸு புரட்டாசிமீ; 1905-ம்ஸு அக்டோபர்மீ [இலக்கம் ௧

"அகர முதல வெழுத்தெல்லா மாதி, பகவன் முதற்றே யுலகு."

உ

திருச்சிற்றம்பலம்.

"பைங்கண்வா ளரவணை யவனொடு பனிமலரோனுங் காணா, வங்கணா வருளென வவரவர் முறை முறையிறைஞ்ச நின்றார், சங்கநான் மறையவர் நிறைதா வரிவைய ராடல் பேணத், திங்கணாள் விழமல்கு திருநெல்வேலி யுறை செல்வர்தாமே."

"புல பல வேட மாகும் பரனரி பாகன் பசுவேறு மெங்கள் பரமன், சலமக ளோடெருக்கு முடிமே லணிந்தெ னுளமே புகுந்த வதனால், மலர்மிசை யோனு மாலு மறையோடு தேவர் வருகால மான பலவ, மலைகடன் மேரு நல்ல வவை நல்ல நல்ல வடியா ரவர்க்கு மிகவே."

திருச்சிற்றம்பலம்.

---

## ஓர் ஆலோசனை.

---

ஒரு தேசமாவது அல்லது அதற்குட்பட்ட பற்பல காரிய நிர்வாக சபைகளாவது நன்னிலைப்பட வேண்டின் அத்தேசத்தின் ஒவ்வொரு குடித்தனக்காரனும் அச்சபைகளின் ஒவ்வொரு காரியஸ்தனும் அல்லது அச்சபைகளின் பரிபாலனத்துக்குட்பட்ட ஒவ்வொருவரும் சிரத்தையுடையவராயிருத்தல் வேண்டும். ஆனால் இயல்பிலே சிரத்தையுடையாதல் அரிது. எனினும் சிரத்தை கொள்ளத் தக்கவாறு விதிகள் அமைத்து அனுட்டானத்தில் விளக்கிவரல் வேண்டும். திருஷ்டாந்தமாக ஓர் கல்விச்சாலையை எடுத்துக்கொள்வாம். ஓர் கல்விச்சாலையின் பணவரவு செலவுகளை ஒழுங்குபடுத்துவதற்கு ஓர் அதிகார சபை ஏற்படுவது நியாயமே. ஆனால் அச்சபைமட்டும் நின்று அக் கல்விச்சாலையை பிரபலப்படுத்துமோ வென்பது சந்தேகம். அக் காரியநிர்வாஹ சபையோடு அக் கல்விச்சாலையின் கல்விமைமட்டும் கவனிக்கத்தக்க மற்றோர் சபையும் வேண்டும். காரிய நிர்வாஹத்திற்கு ஐசுவரியமும் காரிய சாமர்த்தியமு முள்ளவர்களை விசேடமாகத் தேடிக்கொள்வதுபோல கல்வி அபிவிருத்தி சபைக்கு கல்வியிற்றேர்ந்த வித்வான்களைத் தேடிக்கொள்ளல் வேண்டும். அவ்வித்துவான்களாவார். யாரெனின்: பெரும்பான்மையும், அக் கல்லூரியில் போதிக்கின்ற போதகரே அநேகராவார். காரிய நிர்வாஹ சபையிலுள்ள வித்வான்களிற் சில நம் கல்விச்சாலை போதகரிற் சிலரும் கூடி ஓர் சபையாக அமைந்தால் அத்தகைய கல்விச்சாலையானது விசேஷ பிரபவத்தைப் பெறும். எனென்றால் காரிய நிர்வாஹ சபையருக்குள்ள சிரத்தையில் நாலில் ஒருபாகம் போதகர்கட்கு ஏற்படுமாகில் கல்விச்சாலையின் கல்வி விருத்தியானது எளிதிற் கைகூடப்பெறும். கவர்ன்மென்டார் லோக்கல்பண்டு, முனிசிப்பாலிட்டிகளுக்கு தீர்வை செலுத்தத்தக்கவர்களையே, தீர்வை வசூல் செய்வதற்கும் கருவியாக்கி யிருப்பதுபோல கல்வி கற்பிக்கச் சாதகராகிய போதகர்களையே கல்வித் தேர்ச்சியையும் பரீக்ஷிக்கும் சபையில் மெம்பர்களாகச் சேர்த்துக்கொண்டால் அவர்கள் கேவலம் சம்பளத்திற்கு உழைப்பதாகிய கருத்தை விட்டு கல்விச்சாலையின் விசேட விளக்கத்தைக் கருதுவதில் நாட்டமுடையவராவார். அதனால் ஒவ்வொரு போதகரும் தம்தம் மாணாக்கரது படிப்பைக் கவனிக்கநேரிடும். படியாத பையன்களுடைய நடை உடை பாவனைகளைக் கவனித்து அவர்களுடைய பெற்றோருக்குத் தெரிவித்து அவர்களைச் சீர்ப்படுத்தும்படியான சிரத்தை எடுத்துக்கொள்வர். அதிலும் சீர்ப்படாத பையன்களைப்பற்றி அப்பெற்றோர்களுக்கு எடுத்துக்காட்டி அவர்களுக்கு நஷ்டமுண்டாகாதபடி அப் பையன்களை அவர்களுக்குத்தக்க முயற்சியிற் புகுவிக்கும்படி போதித்து அவர்கட்கும் கல்விச் சாலைக்கும் ஒருங்கே நன்மை விளைவிக்கலாகும்.

ஆதலால் ஓர் கல்விச்சாலைக்கு காரிய நிர்வாஹ சபையோடு, கல்வி பரீக்ஷா சபையொன்றும் ஸ்தாபித்து இரண்டு சபையிலுமுள்ள மெம்பர்கள் ஒவ்வொருவரும் சிரத்தை எடுத்துக்கொண்டால் அக் கல்விச்சாலையின் பெருமை அளவிடத்தகுமா?

இலக்குமணப்போற்றி.

கையொப்பவிகிதம்:— உள்ளூர், வெளியூராருக்குத் தபாற்கூலி யுட்பட முன்பணமாக ஒரு வருஷத்திற்கு ரூ. 1, மோர்மேன் சிங்கப்பூருக்கு ரூ. 2, தனிப்பிரதி 1-க்கு அணா 2.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

"அடிநாயைச் சிவிகைத் தவிசேறித் திரிவித் தறியாவப் பசுதைச் சிறியோர்பாற் செறியுங், கொடியேனுக் கருளைத் திருநாவுக் கரசைக் குணமேருத் தனைவிட் டெனைப்பமொட் டகல்விற், பிடியாப் பெறுதற் கரிதாகச் சொலுமப் பிணதுலைப் பெருகப் பொருளாகக் கருதுஞ், செடிகாயத் துறிகைச் சமண்மூடர்க் கிழவுற் றதுதேவர்க் கரிதச் சிவலோகக் கதியே."

திருச்சிற்றம்பலம்.

## கடவுள் வாழ்த்து.

கடவுள் ஒருவர் வாழ்த்துகையால் வாழ்ந்துபோவானும் அல்லன்; வாழ்த்தாமையால் வாளா இருப்பவனும் அல்லன்; தாழ்த்துகையால் தாழ்ந்தொழிவானும் அல்லன். அவனை வாழ்த்துவோர் வாழ்வர்; வாழ்த்தாதார் வாழ்க்கையால் ஆய பயன் கொள்ளார்; தாழ்த்துவோர் தாழ்வர்.

கடவுள் ஒன்றை வேண்டலும் இலன், வெறுத்தலும் இலன். அதனால், அவன் தன்னை வாழ்த்துவோர்பால் விருப்பும், வாழ்த்தாதொழிவோர் அல்லது தாழ்த்துவோர்பால் வெறுப்பும் உடையன் அல்லன், உயிர்கள் ஆகிய வானவர் முதலியோரே ஒன்றை வேண்டுகின்றார்கள் அல்லது வெறுக்கின்றார்கள். அதனால், அவர் தமக்கு வேண்டுவன செய்தாரை விரும்புதலும் புகழ்தலும், வெறுப்பன செய்தாரை வெறுத்தலும் இகழ்தலும் செய்கின்றார்கள்.

கடவுள் தன்னலம் கருதுபவன் அல்லன்; பிறர் நலம் கருதும் பேரருளாளன்; அதனால், உயிர்கள் தம் சிறுமைக்கேற்ப, வெறுப்பனவே செய்யினும், அவற்றைப் பொருட்படுத்தாது தன் பெருமையினாற் பொறுப்பவனே ஆம். உயிர்கள் அந்நலன் கருதியும் தந்நலன் கருதியும் அவனை வாழ்த்துதல் செய்வர் என்பது மேல் வரும் அருட்பாக்களால் அறியப்படும்.

அவை வருமாறு:—

திருச்சிற்றம்பலம்.

"வெறுப்பனவே செய்யுமென் சிறுமையை நின் பெருமையினாற், பொறுப்பவனே யராப் பூண்பவனே பொங்குகங்கை சடைச், செறுப்பவனே நின் திருவருளாலென் பிறவியையே, யறுப்பவனே யுடையா யடியேனுன் னடைக்கலமே."

"வாழ்த்துவதும் வானவர்க டாம்வாழ்வான் மனநின்பாற், றாழ்த்துவதுந் தாமுயர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்டிச், சூழ்த்துமது காமுரலுந் தாரோயை நாயடியேன், பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானுமுனைப் பரவுவனே."

திருச்சிற்றம்பலம்.

உயிர்களாகிய நாம், சிற்றறிவும் சிறு தொழிலும் உடையோம். அதனால் நமக்கு வேண்டத் தகுவதிது தகாததிதுவென உள்ளபடி வகுத்துணர்தலும், வேண்டத்தகுவது இதுவென உணரினும், அதனை வேண்டிப் பெறுந் தகுதி நமக்கு உளதோ இல்லதோ என அறிதலும், அதற் கேற்ப முயறலும், பெறுதலும் இயலாவாம். இதனால், நாம் ஒன்றை வேண்டினால், அது நமக்கு நன்றாய்முடியினும் முடியும், தீதாய் முடியினும் முடியும், இவற்றுள் ஒன்றினும் படாததாய் முடியினும் முடியும்; இன்னது இதுவாம் என ஒன்றைத் துணிய முடியவில்லை. அன்றியும், நாம் 'ஒன்றை நினைக்கின் அது வொழிந்திட் டொன்றாகும், அன்றி அது வரினும் வந்தெய்தும்—ஒன்றை நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்." இவையெல்லாம் நம் செயல் அல்லவே! நம்மை ஆளும் கடவுளுடைய செயலே அன்றோ? ஆதலால் நமக்கு வேண்டத்தகுவது இதுவெனக்கொண்டு, அவனிடத்தே நாமாக ஒன்றை வேண்டலும் இன்றி வெறுத்தலும் இன்றி, அவன் தந்தது பெற்று, அதுவே நமக்கு நன்றெனக் கொண்டு நம துள்ளந்திரம்பி, அவன்றன் குறிப்பறிந்தொழுகி, அவனை வாழ்த்தியிருத்தலே உண்மையான வாழ்க்கையாம். இதனை மேல்வரும் அருட்பாவினால் அறிந்துகொள்ளப்படும்.

அது வருமாறு:—

திருச்சிற்றம்பலம்.

"வேண்டத் தக்க தறிவோய் நீ வேண்ட முழுதுந் தருவோய் நீ, வேண்டு மயன்மாற் கரியோய் நீ வேண்டி யென்னைப் பணிகொண்டாய், வேண்டி நீ யாதருள் செய்தா யானு மதுவே வேண்டினல்லால், வேண்டும் பரிசொன் றுண்டென்னி லதுவுமுன் றன் விருப்பன்றே"

திருச்சிற்றம்பலம்.

மேலும், 'கடவுள் தன்னை வாழ்த்துவோரை வாழ்த்துவன்' என்னும் அதனால், அவனை ஒன்றுவிரும்பி வாழ்த்துதலும், வாழ்த்தாதொழியிற் றுன்புறுத்துங்கொல்லோ என அவனை அஞ்சி வாழ்த்துதலும் உளவாம். அவையெல்லாம் அத்துணைச் சிறப்புடையனவல்ல. கடவுள் நம்மை வாழ்த்தினும், வாழ்த்தாதொழியினும், தாழ்த்தினும், அவற்றுள் ஒன்றையும் நோக்காது, அவன் நமது ஆண்டான்,

நாம் அவனது அடிமை; அவன் நமது தந்தை,
நாம் அவனுடைய பிள்ளைகள், என்னும் அத்துணை
யேயறிந்து, அவ்வளவிலே உவகைபொங்கி வாழ்த்
துவதே, ஏனை வாழ்த்துக்கள் அனைத்தையுங் கடந்த
கடவுள் வாழ்த்தாம். இதனைநோக்கியேபோலும்,

"வாழ்த்துவாய் வாழ்த்தா தொழிவாய் மறுசுழியிட்
டாழ்த்துவா யஃதறிவாய் நீயன்றே—யாழ்த்தகைய
வண்டார் பொழிற்கயிலை வாழ்கென் றிருப்பதே
கண்டா யடியேன் கடன்."

என்றருளிச்செய்தார் நக்கீரதேவ நாயனார்

## ஒழுக்கம் போற்றல்.

"ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க
முயிரினு மோம்பப் படும்."

என்றா ரெமது திருவள்ளுவ நாயனார்.

நல்லொழுக்கமாயது தன்னையுடையார்க் கெவ்வழி
யானுஞ் சிறப்பைத் தரலான், அஃது நந்த மின்னுயிரினும்
பன்முறை சிறந்த வருமையும் பெருமையு முடைத்து. இ
ன்னும், ஒழுக்கத்தைப் பொருளெனப் போற்றுவா ரெவ
ரும், தம்மாருயிரினை யிழக்கநேர்ந்தவிடத்தும், தந்நெறியி
னின் றிம்மியும் வழுவாரெனவும்; தம்போ லொழுக்கமு
டையாரெவரையுந் தம்முயிரினு மோம்புவரெனவுங் கொ
ள்ளக்கிடக்கின்றது. இங்ஙனம், ஒழுக்க முயிரினுமேம்
பாடுடைத்தென்ற போழ்தே, ஒழுக்கமிழந்தா ரனைவரும்
உயிரிழந்தாரோ யாவர்; இனி உயிரிழந்தாரையன்றோ
நாம் பிணங்களெனக் கூறுவேம்? இம்மட்டோ? ஒழுக்க
முயிரினுமேலதெனின், அவ்வொழுக்கமிழந்தா ருயிரிழ
ந்த பிணங்களினு மிழிந்தாரெனக் கொள்ளலிற்றடை
யென்? இனி, நாம் பிணங்களோடு பேசலும், வாழலும்,
அவற்றை வணங்கலும் வாழ்த்தலும் எங்ஙனேனுமு
ளதோ? பிணங்களைக் கைகொடு தொட்டாரும் கண்
கொடு பார்த்தாரும் தீட்டுடையாரெனவும், அவரும் நன்
னீரிற் றோய்ந்து தம்மைத் தூயராக்கினாலன்றிப் பிறரைத்
தீண்டலும் படாதெனவும், இன்ன பல வழக்கங்களை யு
டையேமல்லேமோ நாம்? இங்ஙனன்றோ நமது நெறி
நூல்களு நவில்கின்றன? அங்ஙனமாக, இப்பிணங்களினு
மிழிந்தாராய வொழுக்கமில்லவரைக் காண்டலும், அ
வரோடு பேசலும், வாழலும், அவரைவணங்கலும், வாழ்த்
தலு நம் மொழுக்கிற் கழகாவதோ? அவரையும் பொரு
ளெனப் போற்றின், அவரினு மிழிந்தோரன்றோ வாவே
நாமும்? ஆகவே, அன்னாரைப் போற்றிவாழ னம்மொழுக்
கிற் கிழுக்கன்றோ? ஒருக்கால் "இந்நிலத்திற் செல்வ
மிழிந்தார் மாட்டே பெரிது முளதாதலின், அவரைப்
போற்றியொழுகா துயிர்வாழ்தல் கடிது" எனக் கூறின்,
மக்காள், நீவிர் பெரிதும் பிழைத்தீர். வாழ்தலாவதியாது?
ஒழுக்கத்தினின்று வழுவாது வாழும் வாழ்க்கையையன்
றோ நல்வாழ்க்கையென வழுத்துவர் வல்லார்? அங்ஙனி
ருப்ப, ஒழுக்கமில்லாரை யடுத்தும், அவர்க்கேற்ற வொழுக்க
மில்லவற்றைப் புரிந்தும், பொருளீட்டி வாழும் வாழ்க்
கையும் வாழ்க்கையாவதோ? நீவிர்தாங் கூறுவதுஞ் சிறி
து கேட்பாம். இன்னும், நீவிர் வயிறார வுண்டுடுத்து வா
ழும் வாழ்க்கையைப் பெரிதென வெண்ணினீரன்றி யஃ
தினு மரிய வொழுக்கத்தைப் பொருளெனப் போற்றினீ
ரெனத் தோன்றுகின்றிலதே? நீர் உண்டலு முடுத்தலு
மெற்றிற்கு? உமதுயிரைக் காத்தற்பொருட்டோ? அல்
லால், உலகினுக் கேதேனு நன்மையுமால் விளைவதென
வோர்ந்தோ? ஒழுக்கத்தைப் போற்று மும்மா லிவ்வுலகெந்
நலம்பெற வல்லது? ஆகவே, நீவிருண்டலும் வாழலும்,
வெறுமனே, உமதுயிரையே காத்தற்பொருட்டா யமை
கின்றனவன்றிப் பிறர்பொருட் டன்றே? இனி, நீ ருமதுயி
ரைக் காத்தற்கெண்ணியன்றோ வுமதொழுக்கத்தை மறந்
தீர்? ஆகவே நீவிரெமது வள்ளுவர் மொழியை மறந்தீரல்
லீரோ? ஆதலின் செல்வமுடையாரோ யாயினும், கல்வி
யுடையாரோயாயினும், வலியுடையரோயாயினும், புகழு
டையாரேயாயினும், அன்றி வேறென்னுடையரோ யாயி
னும், அவர்தம்முடலினின் றுயிர்நீங்கும்போழ்து, அவர்க்
குப் பிணமெனப் பெயரிட் டழைத்து, அவர் பொருளெ
ன வெண்ணிப் போற்றிவந்த வுடலைச் சுடுகாட்டிடை
கொண்டெறிதல் போன்று, நாமுமவ்வுயிரினுமரிய வொ
ழுக்கத்தை யிழந்தோமாயின், நாமெவ்வெவ் வழியா
னெவ்வெத்துணைப் பெரியோரோயாயினு மென்கொல்?
வள்ளுவரனைய நல்லார் கட்புலன்கட்கு உயிரிலாப்பிணங்
களினிழிந்த பிணங்களாய்த் தோன்றுவேமன்றி வேறெ
ன்னாவேம்? ஒழுக்கந்தவறிய மாந்தரனைவரும் நம்மினு மி
ழிந்தார்க்குமட்டுமே சிறப்புடையராய்த் தோன்றுவரன்றி
நல்லொழுக்கம் வாய்ந்த வுயர்ந்தாரெண்ணிக்கையிற் சிறி
துமுளார். இனி, வயிறுவளர்த்தற்பொருட்டாய்த் தம்மொ
ழுக்கத்தை விற்றுணாச் சில்வழியாற் பொறுத்தாளல் கூடு
மெனினும், நங்காட்டிற் செல்வமுடையாரெண்ணிலார்
தம்மொழுக்கத்தினின்று வழுவியவா றெங்ஙன்? அவர்
தங் கல்வியின்மை யென்பேமா? அன்றன்று. கல்லாப்
பதர்களு மிறங்காத்துறைகளினன்றோ நன்கு கற்றுணர்ந்
தாரு மிறங்கத் துணிந்தன ரிந்நாட்களில்? அந்தோ! தா
மு மறுசுவையோ டுண்டு எண்ணி லேழைகட்கு மூணு
டை கொடுத்துதவவல்ல பெருஞ்செல்வமும் பெற்று,
நந் நாட்டார் பழநூற்களினு மேனாட்டார் புதுநூற்களினு
நன்கு பயின்று பெறற்கரும் பெரும்பெயரும் படைத்துள
பல்லோர், தீயனவென்ன வெந்நாட்டாராலு மொருங்கே
நீக்கப்பட்ட புன்னெறிகளிலிறங்கி, அறவழியென்னுநேர்
வழி யின்னதென வுணரவும் வலியற்றுத் தடுமாறித் தட்
டழிந்து வருகின்றனரோ? இவர்தங் கல்வியாற்று னிவர்க்
கென்பயன் விளைந்தது? யாதுமின்றே? ஆதலின், தீநெ
றிப்பட் டழிந்தாரை நன்னெறியின்பாற் படுத்தவல்லதோ
கல்வி? என்னு மோசையமும் பிறக்கின்றிலதோ? இங்
ஙன், கல்வியுஞ் செல்வமு மொருங்கே படைத்துளாரு
மொழுக்கத்தின் விழுப்ப மிஃதென வுணரவியலாதாராம்
போழ்து, கல்வியின்மை யென்னு மடமையாலும், செல்
வமின்மையென்னும் வறுமையாலும் புன்னெறிச்சென்
றார்க்காய் நாம் வருந்துதலெவ்வாறு? ஒழுக்கமித்துணை
யுயர்வுடைத்தென விண்ணமரர்க்குப் புகட்டி யறிவுறுத்த
வல்லது மிடியொன்றல்லது பிறிதொன் றில்லையெனக்
கொள்வாரும் சிலருளர். என்னினும், மிடியின் வலியா

லொழுக்கந்தவறினோரு முளர்; அவ்வாறின்றி மிடியே சில்லாரை நன்னெறியின்பாற் படுத்து முளது; அதுபற்றி, ஒரு நல்லனை தீயனாக்குவதும், தீயனை நல்லனாக்குவது மிடியொன்றே யென்னலை நாமொப்பிடத் துணியேம். இனி, பிறப்பாலேனு மொருவ னன்னெறி பற்றி யொழுகுதல் கூடுமோவென நினைக்கின்,— அய்யோ! பிறப்பாலெவ்வெவ்வள வொருவனுயர்ந்தானாய்க் காணப்படுகின்றானோ அவனன்றோ மற்றவரையு மிந்நாட்களிற் றீவழிப்படுத்தும் வழிகாட்டியாய்த் தலங்குகின்றான்? ஆதலின், பிறப்பேனும், கல்வியேனும், செல்வமேனும், மிடியேனு மொருவனை நல்வழிபற்றி யொழுகுமாறு தூண்டவல்லதன்று. உற்றுநோக்கி யுணராவுணர, ஒருவனுடைய வொழுக்கத்துக் கவனது சேர்க்கையே முதலாகுமெனத் துணியவேண்டி வருகின்றது.

யாவனொருவன் பிறந்த நான்முதல் நல்ல தாய்தந்தையரால் வளர்க்கப்படுகின்றானோ, யாவனொருவன் நல்லாசிரியர்களா னல்ல நண்பரோடு கல்வி பயில்கின்றானோ, அவ்வொருவனே பின்னாட்களிலு நல்லொழுக்கமுடையனாய் நல்லோரால் புகழப்படுவோனாய்த் திகழ்வானென்பதும், இதற்கிணங்க வொழுக்கத்தை விரும்பும் பெற்றோருந் தம்மக்களை நல்லொழுக்க முள்ளாரோடு சேர்த்து நல்வழிப்படுத்தக் கடவர்களென்பது மெமது துணிவு.

குரு—மா, சுந்தரம்பிள்ளை.

---

உ

செப்டம்பர்மீ பிரசுரஞ் செய்யப்பட்டுள்ள இப்பத்திரிகையின் 61-வது பக்கத்தில் "தெய்வந்தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்" என்னுந் திருக்குறளின் பொருள் விஷயமாய் நான் ஆகஸ்டுமீ பத்திரிகையி லெழுதியிருந்ததை மறுத்து மக-ா-ா-ஸ்ரீ P. M. K. அவர்களா லெழுதிய விஷயங்களுக்குச் சமாதானமாகத்தக்க நியாயங்களிற் சில இன்ன மெழுதமுன்னர்; பத்திராதிபரவர்களுக்கு வந்தனமளிப்பதுடனாப்தரவர்கள் P. M. K. அவர்களுக்குச் சகல உயிர்களுந் தெய்வந்தொழவேண்டுமென்ற ஆத்திரமாகிய பெரியபக்தி ஏற்பட்டிருக்கிறதைப் பற்றி அளவில்லாத சந்தோஷத்தோடு வந்தனமளிக்கின்றேன். சகலவுயிர்களுந் தெய்வந்தொழல் வேண்டுவதவசியமென்பதெனக்கு முடன்பாடே. சகலருமென் றேற்படும்பொழுது பெண்களும் விலக்கல்லத்தான். அதுபற்றியே நமது சைவாகமவிதிப்படி தீக்ஷையில்லாதவர்கள் கையி னாகாரமுதலிய கொள்ளலாகா தென்பதை யனுஷ்டித்து பெண்களுக்குஞ் சமய விசேட தீக்ஷை செய்வித்தல் வழக்கமாயிருக்கிறது. இப்பொழுது முலகமுழுவதும் பெண்களெல்லாந் தெய்வந் தொழக்கூடாதென்று மறுக்கிறவனு நானல்ல. தற்காலம் நமக்குள் நேரிட்ட சங்கையும் பெண்களெல்லாந் தெய்வந் தொழல் சரியா அல்லவா என்ற கட்சிப் பிரதிகட்சியுமல்ல. ஆனால் "தெய்வந் தொழாஅள்" என்னுந் திருக்குறளின் பொருளை விசாரித்த இடமே தவிர வேறில்லை. அதில் "தெய்வந் தொழாஅள்" என்பதற்கு நூலாசிரியர் கருத்துக்கிசையவே சந்தேகத்திற் கிடமில்லாமற் பரிமேலழகர் முதலிய உரையாசிரியர்களும் பிறதெய்வந் தொழாது தன்றெய்வமாகிய கணவனையே என்று சுட்டிக் கூறியிருக்கின்றார்கள். அதையனுசரித்தே வடமொழிக்கடலுந் தென்மொழிக் கடலுமுற் றோருங்குணர்ந்த ஸ்ரீலஸ்ரீ சிவஞான சுவாமிகள் முதுமொழிவெண்பாவிலு "மேவுபிற தெய்வந் தொழாஅள்" என்றெடுத்து ஆண்டிருப்பதையு மதற்கு உதாரணமாக கணவனையே தெய்வமாகக் கொண்டிருந்த அனசூயை தன் கற்பின் வலிமையால் திரிமூர்த்திகளையும் வென்றதாகக் காட்டியிருப்பதையு மின்னுமிவ் விதியைப் பொருந்தி மேம்பட்டார் சரித்திரம் பலவுளவாக விருப்பதையும் ஆராயும்போது இந்தக்குறளின் கருத்து பெண்களுக்கு நாயகனே தெய்வமாய்ப் பாவிக்க வேண்டியதைத்தவிரப் பிறதெய்வந் தொழல் உத்தம கற்பிலக்ஷணத்துக்கு விலக்கென்பது தான் எனக்கு மென்போல்வார் பலர்க்குமபிப்பிராயம். மேலுந் தெய்வந் தொழல் விலக்கில்லை என்று சொல்லுகிறதற்கு அந்தக் குறளி லெந்தப் பத மிடங்கொடுக்கிறதென்பது எனக்குப் புலப்படவேயில்லை. தொழாஅள் என்ற பதத்திலேயே இடமிருக்கிறதென்று சொல்வார்களானால், இனி எதிர்மறைக்கெல்லா முடன்பாட்டருத்தங் கொள்ளவேண்டியதாய் முடியும்; அல்ல, நமதபிப்பிராயப்படி பொருள் கொள்வோமானாற், குறளையே மாற்றவேண்டியதைத் தவிர வேறில்லை. ஏனெனில் ஆப்தரவர்கள் கூறியவண்ணங் கடவுள் வாழ்த்தில் "கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான், றாளை வணங்காத்தலை" என்று கூறிய நூலாசிரியரோ இவ்விடத்தில் மயக்கவைத்தாரென்று சொல்லவோ முடியாது. பொதுவிதியாற் சகலவுயிர்களுந் தெய்வந் தொழல் வேண்டுமென்று விதித்தவர் பின் பெண்களுக்குச் சிறப்புவிதியாகத் தெய்வந் தொழுதலோடென்று சொல்லாமல் தெய்வந் தொழாஅளென்று அவரே பொதுவிதி விலக்கிச் சிறப்புவிதி வகுத்திருக்க விலக்கவில்லையென்று சொல்வது பொருத்தமாகமாட்டாது. அடுத்த குறளிலு மதற் கனுசரணையாகவே "பெற்றாற் பெறிற் பெறுவர் பெண்டிர் பெருஞ் சிறப்புப், புத்தேளிர் வாழுமுலகு" என்றுங் கூறியிருக்கின்றார். பெரிய புராணத்திலிருந்து மங்கையர்க்கரசியார் முதலியோருடைய திவ்விய சரித்திரங்களைக் காண்பித்த நண்பரவர்களுக்கு இயற்பகை நாயனாருடைய மனைவியார், சிறுத்தொண்ட நாயனார் மனைவியார் முதலியோர்களுடைய சரித்திரங்கள் ஞாபகத்துக்கு வராமைக்குக் காரணமவை திருக்குறளி னுண்மைப்பொருளுக் கனுசரணையா யிருப்பதுதானென்று நினைக்கிறேன். ஆரம்பமுதலே குறளின் கருத்தின்படி "கற்புடைப் பெண்களுக்குக் கணவனையன்றிப் பிறதெய்வந் தொழல் விலக்கென்பதுதானென்கொள்கை. நண்பரவர்களுடைய கருத்து ஷை குறளிலேயே கற்புடைப் பெண்களுக்குப் பிறதெய்வந் தொழல் விலக்கல்ல என்றருத்தப்படுவதாகச் சொல்லுங் கொள்கை தான்" அப்படியிருக்க ஞாபகமின்மையால் நேரிட்டதவறென்றெழுதியதென்றவறல்லவெனநினைக்கிறேன். இனிச் சிற்றறிவுடைய மனுஷனைப் பேரறிவுடைய கடவுளுக்குப் பதிலாகப் பாவித்தல் தகுதியன்றென்பதற்குச் சமாதானமாக நமது மேலான சமயத்தில் முக்கிய விசே

டமே தெய்வவழிபாட்டின் லக்ஷணமே குருலிங்கசங்கமமென் மூவகையாம். இதிலுள்ள தாரதம்மியங்களையெல்லாம் விரிக்கிற்பெருகுமென்று சுருக்கிச் சுருதிவாக்கியமாகிய ஸ்ரீலஸ்ரீ ஓதாதுணர்ந்த மூர்த்திகளுளொருவராகிய நமது மகான் குமாரகுருபர சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய நீதிநெறிவிளக்க மென்னு நூலு ளொருசெய்யுளை மட்டுங் காட்டி முடித்துவிடுகிறேன். அச்செய்யுளாவது: "குலமகட்குத் தெய்வங் கொழுநனே மன்ற, புதல்வர்க்குத் தந்தையுந் தாயு—மறவோர்க், கடிகளே தெய்வ மனைவோர்க்குந் தெய்வ, மிலைமுகப் பைம்பூ ணிறை." மேலுமிக் குறளி னருத்தவிஷயமாய் மாறிமாறி எழுதுவதிலயாது நன்மை படவ தென்று முடித்து உள்ளபடி ஆராமையிருக்கும் விஷயததி லிந்தநியாயந் தெளிதற்பொருட்டுத் திருவேங்கடமுதற் றென்குமரிவரையுள்ள தமிழ்வித்வான்களைச் சேர வொரு வித்துவசபை கூட்டியாவது அப்படிச் சௌகரியப்படாத பக்ஷத்தில் ஒஷ்டி பிரபல்யவித்வான்களுக் கெழுதியாவது நேரிலாவது பச்சபாதமன்னியிற் சித்த சமாதானத்துடன் தெரிந்துகொள்வதே நலமென்று நினைக்கிறேன்.

இங்ஙனம்: யன். சங்கரலிங்கம்பிள்ளை.

---

## பரமனையே பாடுவார் இடம்.

உ

திருக்குற்றாலத் தலபுராணமுடையார் அருளிச்செய்த,
குழல்வாய்மொழியம்மை
கலிப்பாமாலை.

---

வாதாய் வினையாய் வருவா ரிருவரவர், சூதாய் ம
யத்தாற் றெருகுவித்தாய் நீப்பாயே, தாதாய் தளவமலர்த்
தாமத்தாய் சண்பகப்பூங், கோதாயென் னம்மே குழல்வா
ய் மொழித்தாயே (26)

சிந்தளவாத் தாவுந் திரையளவா வுள்ளம் வினை,
யந்தளவா வைத்தே னுனதளவா வைப்பேனோ, வந்தள
வார் மாலை யணிந்ததுடுச் சேர்முகில்போற், கொந்தள
வார் கோதாய் குழல்வாய் மொழித்தாயே (27)

பாடலுக்கு நாவாற் பழிச்சலுக்குங் காணுதற்குந்,
தேடலுக்கு மெய்ப்பொருளுன் சேவடிக்கா ளாவேனோ,
வாடலுக்குந் தாள மமைதலுக்குஞ் சேந்தகறுங், கோட
லுக்கு நேர்கைக் குழல்வாய் மொழித்தாயே (28)

மாடமனை வாழ்வின் மயங்கினேன் வால்வளையி,
னீடமறு கூடுவந்து நின்கொலுவுங் காண்பேனோ, நா
டமருப் பையனைவே ளுயகனை யீன்றதிரி, கூடமலை வா
ழ்வே குழல்வாய் மொழித்தாயே (29)

தப்புக் குலாமரிடஞ் சார்ந்துகலி யான்மனமும்,
வெப்புக்கு ளாகி மெலியா தருள்வாயே, யொப்புக்குநே
ரா வொருவனுளந் தாவியிரு, கொப்புக்கும் பாய்கட் கு
ழல்வாய் மொழித்தாயே (30)

தானர சொரூபமது தந்தெனைநீ வைத்ததுபோ,
லானரசு மேல்வந் தடியேற் கருள்வாயே, மானரசு சேரி
லஞ்சி வாழ்பவனுல் வானுடர், கோனரசு தந்தாய் குழ
ல்வாய் மொழித்தாயே (31)

சி, சுப்பிரமணியக்கவிராஜர்.

உ

திருவருட்சகாயம்.

## ஊழிக்காற்றென்னும் கால்ரா அல்லது விடுசி என்னும் விஷபேதி உற்பத்தியாகாதிருக்கும் உபாயம்.

---

நம்மாலொன் றாமெனவிந் நாள்வரைசொல் லாதருளால், விம்மிதஞ்செய் சித்தரடி மேவு.

ஞானவாசிட்டம் கற்கடி கதை. கஉ-வது செய்யுள்.

* கல்லா ரிடத்தி னியெய்தி னுமே விதித்த மந்திரத்தாற், கொல்லா தொழிவாய் தீயோனைக் கொன்ற தின்பா யெனமலரோன், சொல்லா முன்ன மலைபோல்வாள் சூசி யுருவாஞ் சிவனுமாய்ப், பொல்லா தவரஞ் சினத்தடித்தோர் பொன்றும் படியுள் ளுறப்புகுந்தாள்.

க. மனம் வாக்கு காயம் வஸ்திரங்கள் வீடு வளவு சுத்தியாயிருக்கவேண்டும். இவற்றுள் மனச்சுத்தி மிகவும்பெரிது. இக் கருத்தைக்கொண்டே ஸ்ரீ அகத்தியமாமுனிவரும் "பாராளு மன்னருக்கும் சிவயோகிக்கும் வரா" தென் றருளியது மன்றி மனோசுத்தி செய்யக்கூடும் வழியினை ஞானவாசிட்டத்திற் கூறிய கற்கடி காதையாலுங் காண்க.

உ. வாக்கு அதாவது இரத்நங்களினும் உயர்ந்து அழகுசெய்வதும் ஆன்மலாபமாகிய ஆநந்தத்தைத் தருவதுமாகிய தெய்வத்துதி அதாவது தேவார திருவாசக திருவாய்மொழி யாதியவும் சதாசார சாஸ்திர விசாரணையும் மெய்வசனமும் பேசற்குரிய நமது வாய்களாற் புறநிந்தை ஈறிவைக கொடுஞ்சொல் சந்தேக முதலான தியகுணங்களை அவசியம் விலக்கிக்கொள்ளுதல். இதன் விரிவை ஜீவரக்ஷார்த்த மென்னும் கிரந்தத்தில் சாபச்சுரம் அதாவது மஹாத்மாக்களின் நிந்தையா லவர்கள் மனம் நொந்ததுகொண்டு உலகிற் றோற்றமெனக் குறிப்பிடுகின்

---

பிரமதேவனால் நியமித்த மந்திரம்.

* (ப-ம்) விடுசிகா வியாதியைப் போக்கடிக்கிற விந்த மந்திரத்தை யுன்னுடைய சிகிச்சார்த்தமென்றாலே சொல்லப்படுகின்றதென்பார் நாமே விதித்த மந்திரமென்றார். அவையாவன: ஓம் - ஹ்ராம் - ஹ்ரீம் - ஹ்ரூம் - ராம் - விஷ்ணு சத்தியேநமோ - பகவதி விஷ்ணு சத்தி - ஏ - ஹே - ஈ - ஏனும் - ஹா - ஹா - ஹா - ஹந - பச - பச - மத - மத - உச்சாதியோ உச்சாதையோ - தூரே - குடு - குடு - சுவாஹா குறுகுறு சுவாஹா - விடுசிகே - இமோந்தம் - கெச்சா - சிவ - சிவ - சந்திரமண்டலம் - கதோசி - சுவாஹா - என்பனவாம். இவ்விதை ஸ்நானமும் ஆசமனமுஞ் செய்து மாந்திரிகனானவன் வாமகரத்தில் விபூதியை வைத்து அதி லிந்த மந்திரத்தை யெழுதிக்கொண்டு செபித்து ரோகியினுடைய சரீரமுழுதுந் தடவி இம்மந்திரமென்னும் தண்டாயுதத்தினாற் கற்கடி யடிபட்டு இமோர்ப்பருப்பதத்துக்கோடிப்போனதாயும் ரோகியைச் சந்திராமிர்தமத்தியிலிருப்பவனாயும் வியாதி விடுபட்டவனாயும் சராமரண மில்லாதவனாயும் பாவித்துத் ததேகமாய்ச் செபஞ்செய்து சிந்தித்து கிரமமாக வ்விவிடுசிகா வியாதியைப் போக்கடிப்பனெனக் கொள்க.

ரூர். அதன் லக்ஷணத்தை வாசிக்கும் ஒவ்வொருவருக்கும் பிளேக்கி னுற்பத்தி பிரஸ்தாரமாகும். இத்தகையதூஷணைகள் செய்வோரைப்பற்றி "கோவி யவாவ னிரங்காக் குணக்கேடன், பாவியமல் லாததுரைப் பான்" என்னும் சைவசமயநெறி முதலிய சமய சாத்திரங்களினும் காண்க.

௩. இனி தேகம் முதலானவைகளைப் பற்றியவை ஒவ்வொரு நாளும் ஸ்நானஞ்செய்ய வேண்டும்.

௪. வீடுகளின் சலதாரைகளில் புதுத்தண்ணீர் விட்டு ஒவ்வொரு நாளும் கழுவவேண்டும்.

௫. சமைக்கிறதற்கும் சாப்பிடுகிறதற்கும் வழங்குந்தண்ணீரை எவ்விதத்திலும் வடிகட்டவேண்டும். தேற்ருன்விதையை உரைத்துக் கொஞ்சம் படிகாரமுமிட்டு வடித்துக்கொள்ளுதல் உத்தமம். இதனால் சலத்திலுண்டான கெந்தி புழு சேறு மேலேபடியும் இலக்டிரிசிட்டி என்னும் மின்சார வேதுக்கள் முதலியவைகளையும் விலக்கும்.

௬. வீட்டு வாசல்களையும் சன்னல்களையும் திறந்து வைத்து நல்ல காற்றைப் பரவவிட வேண்டும். ஒவ்வொருவரும் சிரசு, பாதம் இவைகளை மூடியே வைக்க வேண்டும்.

௭. அக்கம்பக்கங்களில் விஷபேதி நடக்கும்போது ஆகாரமருந்துகையில் மிகவும் எச்சரிப்பாயிருக்க வேண்டும். குளிர்ந்த அன்னம், பழங்கறிகள், கொய்யாப்பழம், நாவற்பழம், கடலைத்தினுசுகள், வாய்வுத்தினுசான காய்கள், மதுபானம் இவைகளைப் புலால்வகைகளை அறவே நீக்கவேண்டும்.

## இந்நோய் கண்டிருக்கும்போது செய்யவேண்டிய விதம்.

௧. வயிற்றிலே அதிக இரைச்சலுண்டாகுமானல் அல்லது கழிச்சலுண்டாகுமானல் உடனேபோய்ப் படுத்துக்கொண்டு பின் சொல்லப்படும் ஔஷதங்களைச் சாப்பிட வேண்டும்.

௨. சினக்காரம் அல்லது படிகாரம், காசுக்கட்டி, கருவாப்பட்டை இவைகளை வகைக்கு ஒரு புளியங்கொட்டையளவு எடுத்துப் பொடிசெய்து கொஞ்சந் தேன்விட்டுக் குழப்பி விழுங்க வேண்டியது. இரண்டு நாழிகைக்கோர் விசை திரும்பத் திரும்பச் செய்யவேண்டும். அவசியமானல் இடையிலுஞ் செய்யலாம்.

௩. அடுத்தவிசை காண்கிற பேதி கஞ்சித்தண்ணீர் போலிருந்து நாற்றமில்லாதிருந்தாலும் அல்லது கொஞ்ச நாற்றமுள்ளதா யிருந்தாலும் உடனே கட்டிலின் கீழே கொஞ்சம் மணற்போட்டு பேதியான ஒவ்வொருதடவையும் உடனுக்குடனே அந்தமணலை எடுத்து வேறு மணல் போடவேண்டும். வெளியே அதைக் கொட்டி வைக்கவும் புதைக்கவுங் கூடாது. சற்று சிரமம் நோக்காது மணலையும் பேதியையும் ஒரு உடைந்த சட்டியிலிட்டு எரித்துவிட வேண்டும்.

௪. மிளகு, பெருங்காயம் இவைகளில் வகைக்கு ஓர் புளியன்விரை யளவும் அபினியில் அரைப் புளியன்விரை யளவும் எடுத்து அரைத்துப் பன்னிரண்டு மாத்திரைகளாக்கி வைத்துக்கொண்டு மணிக்கொரு மாத்திரை வீதம் வியாதி நீங்கிச் சுகத்துக்கு வருகிறதாகத் தோன்றுகிற வரைக்கும் சாப்பிட வேண்டியது. எழுமுதல் பதினன்கு வயசுவரையுள்ள பிள்ளைகளுக்கு அரை மாத்திரை கொடுக்கவும். சிறு குழந்தைகளுக்கு இந்தமுறை வேண்டாம்.

௫. சிறு குழந்தைகளுக்கானல் சுக்குக்கஷாயத்தில் சர்க்கரை கலந்து கலமல் என்னும் ரஸபஸ்பம் கால் கிரையின் வீதம் ஷை பேதியின் வெண்மைநிற மாறி மஞ்சள்நிற மாகிறவரையில் கொடுத்துவரவும்.

௬. கால் கை இழுக்கிறதாயிருந்தால் கொஞ்சம் நல்லெண்ணெயுடன் கற்பூரத் தைலத்தையுஞ் சேர்த்து வெதுப்பிக் கைகளிலும் கால்களிலும் கீழேயிருந்து மேல் நோக்கி நன்ருய்த் தேய்க்க வேண்டியதுமன்றி உள்ளங்கால், உள்ளங்கை, அக்குள் முதலிய இடங்களில் தவிடும் சாம்பலும் வறுத்துத் துணியிற்கட்டி ஒத்திடங் கொடுக்கவும்.

௭. மெய் மறந்துவிட்ட சமயத்தும் பருத்தி விதையளவு சூடத் துண்டை இரண்டுநாழிகைக் கொருவிசை நாவிலே வைக்கவும் ஸ்மரணை யுண்டாக்கும்.

## பொதுவானவாந்திபேதி என்னு மவற்றுள் முக்கியமான கொம்பன்என்னும் விஷபேதியின் குறிகள்.

வாந்திபேதியுடன் தேசமெங்கும் பிசுபிசென்றொட்டிக்கொள்ளும்படியான வியர்வும் அதி துற்பலமும் நீரிறங்காமலும் விரைவில் தோஷித்தும் விக்கல் முதலிய துற்குணங்களுடன் ஒன்று அல்லதிருவேளைக்குள் படுக்கையிற் றள்ளிவிடும். மற்று மிருவிதமான குடற்படுவன் அக்கிரகம் முதலியவைகளை அகத்தியர் ஊழிக்காற்று என்னும் நூலினிடத்தே காண்க.

இதுவுமன்றி அசீரணம், பயம், கவலை முதலான காரணங்களாலும் சில தேசுகள் உற்பத்தியாகி முடிவில் நமது அசட்டையினலேயே வாந்திபேதி ரூபத்தை அனுசரிக்கிறதாகவு மெண்ணவேண்டியிருக்கின்றது.

## இதற்கு நிவர்த்தி.

ஊசி மிளகாய் அல்லது சீமை மிளகாய்ப்பழம் காய்ந்தது அவுன்ஸ் க, சூடன் அரையவுன்ஸ் இரண்டும் தூள் செய்து சாற்படி அப்சாந்தியென்னுஞ் சாராயத்திலிட்டுக் குலுக்கி இரண்டு வாரம் வைத்திருந்து வடிகட்டி அதில் அரையவுன்ஸ்முதலிரண்டரை யவுன்ஸ்மட்டும் தாமறிந்து குளிர்ந்த ஜலத்தில் விட்டுக் கொடுத்துவரவும் குணமாகும்.

பேதி என்பவற்றுக்கெல்லாம் பொதுவான சித்தௌஷதத்தை உலோகோபகாரமாகத் திருவானைக்கா ஸ்ரீ புவனம்பிகா பக்த ஜன சித்தசபாக்கிரேசரவர்களாகிய ஸ்ரீமத் ஞானசித்த சுவாமிகள் ஆக்ஞைப்படி முடித்து அடியிற் கண்ட விலாசங்களில் வைத்திருத்தலால் வேண்டுவோர் இனமாகவே மாத்திரையைப் பெற்று உபயோகிக்கு முறை முதலியவற்றைக் கவனித்து ஸ்ரீ புவனம்பிகையின் திருவடியைத் தியானஞ் செய்து உபயோகித்து வரின் சுகமாகும்.

## ஔஷதங் கிடைக்குமிடம்.

சென்னை செந்தோம் காலேஜ் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமது வேங்கடராம ஐயங்காரவர்கள், மக-ா-

ா-ஸ்ரீ ஸ்ரீ சுதேசிப் பத்திராதிபர் சங்கரலிங்கம்பிள்ளையவர்கள் பி. ஏ., வில்ஸன் கம்பேனி துபாஷி மக-ா-ா-ஸ்ரீ கா. பத்மநாபநாயகரவர்கள், மெசர்ஸ் ஆர்பத்னெட் அவுஸ்கிளர்க்கு மக-ா-ா-ஸ்ரீ பி. இரத்தினவேலுசெட்டியாரவர்கள், புதுவையில் வசிக்கும் மைசூர் பிரம்மஸ்ரீ பிரம்மாநந்த சுவாமிகள், ஷெயூர் வைத்தியம் மக-ா-ா-ஸ்ரீ பா. இராகவமுதலியாரவர்கள், ஷெயூர் மக-ா-ா-ஸ்ரீ தி. முருகேச செட்டியாரவர்கள்.

இங்ஙனம்:

சித்தசபா மெம்பரும் சத்தியமங்கலம் சூப்ரவைசருமாகிய

ஜே. யன். வேணுகோபாலுநாயுடு.

ஜூபானிக் பிளேக் என்னும் விஷசுரத்திற்குத் தக்க மருந்தொன்று சித்தமூர்த்திகளால் செய்யப்பட்டு வருகின்றது.

---

உ

திருச்சிற்றம்பலம்.

## மதுரைத் தமிழ்ச் சங்கம்

### இச்சங்கத்துத் தனித்தமிழ்ப் பரீக்ஷை விதிகள்.

---

I. இச்சங்கத்துச் சேதுபதி செந்தமிழ்க் கலாசாலைப் பரீக்ஷையோடொப்ப இச்சங்கத்தார் ஏற்படுத்தியிருக்கும் ஷெ தனித்தமிழ்ப் பரீக்ஷை பிரவேசபண்டித பரீக்ஷை, பாலபண்டித பரீக்ஷை, பண்டித பரீக்ஷை யென மூவகைப்படும். இப்பரீக்ஷைகள் அடியிற் காட்டியிருக்கிற விவரப்படி மதுரை, திருச்சிராப்பள்ளி, கும்பகோணம், திருநெல்வேலி, திருவனந்தபுரம், சேலம், கோயம்புத்தூர், கூடலூர், சென்னை, கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இப்பன்னிரண்டு நகரங்களிலும் விசுவாவசு வருஷம் தைமீ 10, 11, 12-தேதிகளில் நடைபெறும்:—

பரீக்ஷை விஷயம் காலம் முதலிய விவரம்.

(1) இலக்கணம் தைமீ 10-உ காலை 10-மணிமுதல் 1-மணிவரை அம்சம் 90. மாலை 2-மணிமுதல் 5-மணிவரை அம்சம் 90.

(2) இலக்கியம் தைமீ 11-உ காலை 10-மணிமுதல் 1-மணிவரை அம்சம் 60. மாலை 2-மணிமுதல் 5-மணிவரை அம்சம் 60.

(3) வசனம் அல்லது தர்க்கம் தைமீ 12-உ காலை 10-மணிமுதல் $11\frac{1}{2}$-மணிவரை அம்சம் 60.

(4) செய்யுளியற்றல் ஷெ தெய்தி காலை 12-மணி முதல் $1\frac{1}{2}$-மணிவரை அம்சம 60.

(5) வியாசமெழுதல் ஷெ தெய்தி மாலை $2\frac{1}{2}$-மணி முதல் $4\frac{1}{2}$-மணிவரை அம்சம் 60.

II. ஷெ பரீக்ஷைகளுக்குரிய பாடங்களும், பரீக்ஷகரும் அடியில் வருமாறு:—

(i) பிரவேச பண்டித பரீக்ஷைக்கு:—

இலக்கணம்:— எழுத்துஞ் சொல்லும்—நன்னூற் காண்டிகை. *யாப்பும் அணியும்—விசாகப் பெருமாளையர் இயற்றியவை.

இலக்கியம்:— திருவரங்கத்தந்தாதி, மறைசையந்தாதி. மீனாக்ஷியம்மை பிள்ளைத் தமிழ். அழகர் கலம்பகம், மதுரைக் கலம்பகம். நாலடியார், *நான்மணிக் கடிகை. *வில்லிபாரதம் முதல் 1000-செய்யுட்கள்.* நைடதம் முதல் 500-செய்யுட்கள். பிரபுலிங்கலீலை முதல் 500-செய்யுட்கள்.

வசனம்.—பெரியபுராண வசனம் (நாவலர் பதிப்பு).

செய்யுளியற்றல்.—வெண்பா, ஆசிரியப்பா.

வியாசமெழுதல்.

(ii) பாலபண்டித பரீக்ஷைக்கு:—

இலக்கணம்:—

எழுத்துஞ் சொல்லும்—நன்னூல் விருத்தி. தொல்காப்பியம் எழுத்ததிகாரம் (நச்சினார்க்கினியர் உரையுடன்). பொருள்—நம்பியகப்பொருள். யாப்பு—யாப்பருங்கலக் காரிகை. அணி—தண்டியலங்காரம்.

இலக்கியம்:—

தஞ்சைவாணன் கோவை (சொக்கப்பநாவலர் உரையுடன்). திருவிளையாடல் முதல் 500, காஞ்சிப்புராணம் முதல் 1000, பாகவதம் (செய்யுள்) முதல் 500. மணிமேகலை முதல் 10 காதைகள். புறநானூறு முதல் 50 செய்யுட்கள். திருக்குறள் முதல் 25 அதிகாரம். பன்னூற்றிரட்டு முதல் 100 செய்யுள்.

தர்க்கம்.—தர்க்க சங்கிரகம்.

செய்யுளியற்றல்.—வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா.

வியாசமெழுதல்.

(iii) பண்டித பரீக்ஷைக்கு.

இலக்கணம்:—

எழுத்துஞ்சொல்லும்—தொல்காப்பியம் எழுத்ததிகாரம் (நச்சினார்க்கினியம்), சொல்லதிகாரம் (சேனாவரையம்). பொருள்—தொல்காப்பியம் அகத்திணையியல், புறப்பொருள் வெண்பாமாலை. யாப்பு இலக்கணவிளக்கப் பாட்டியல். அணி—தண்டியலங்காரம். (சுன்னாகம். அ. குமாரசுவாமிப்பிள்ளை யவர்கள் புதுப்பித்தது).

இலக்கியம்:—

திருக்கோவையார். (உரையுடன்) இராமாயணம் முதல் 1000 செய்யுள்கள், பெரியபுராணம் முதல் 1000, கந்தபுராணம் முதல் 1000. பத்துப்பாட்டு—மதுரைக்காஞ்சி, சிலப்பதிகாரம் முதல் 10 காதைகள், சிந்தாமணி—நாமகளிலம்பகம். திருக்குறள்—அறத்துப்பால் பொருட்பால்.

கலிங்கத்துப்பரணி.

தர்க்கம். அன்னம்பட்டீயம்.

செய்யுளியற்றல்—பாவும், பாவினங்களும்.

வியாசமெழுதல்.

III. இப்பரீக்ஷை விஷயங்களில் மொத்தத்தில் 100-க்கு 60 அம்சம் வாங்குவோர் முதல் வகுப்பினராவர்; மேற்கூறியவாறே 100-க்கு 40 வாங்குவோர் இரண்டாவது வகுப்பினராவர். இத்தரம் எல்லாவகுப்புப் பரீக்ஷைகளுக்கு மொக்கும்.

(1) இலக்கியம், இலக்கணம் வியாசமென்னும் மூ

---

*இவ்வடையாளமிட்டவை மதுரைத் தமிழ்ச்சங்கம் பதிப்பு. ஷெசங்கம் ஆபீஸில் விலைக்குக் கிடைக்கும்.

ன்று விஷயங்களிலும் ஒவ்வொன்றிலும் மூன்றிலொரு பங்கிற்குக் குறையாத சிற்றம்சம் (Minimum marks) பெறல்வேண்டும்.

IV. ஷை வகுப்புப் பரீக்ஷை ஒவ்வொன்றிலும் 1-வது வகுப்பினராய்த் தேறிய முதல் மூவர்க்கு மட்டும் அடியிற்காட்டிய விவரப்படி பரிசு அளிப்பதுடன் பரீக்ஷையில் தேறிய அனைவர்க்கும் சங்கத்தாரால் யோக்கியதாபத்திரங்கள் அக்கிராசனாதிபதியவர்கள் கையொப்பத்துடனுஞ் சங்கம் முத்திரையுடனும் அனுப்பப்பெறும். ஷை பரீக்ஷைகளில் தேறியவரின் விவரம் விசுவாவசு ஞு பங்குனி மீ ௯-வ்ருப்பின் சங்கத்தினின்று வெளிவரும் "செந்தமிழ்" பத்திரிகையிற் பிரசுரிக்கலாகும்.

பரிசின் விவரம்.

முதற்றரத்தினராய்த் தேறியவர்கட்கு.

பிரவேச பண்டித பரீக்ஷையில் 1-வது பரிசு ரூ 50 பெறத்தக்க தங்கப்பதக்கம். 2-வது பரிசு ரூ 30. 3-வது பரிசு ரூ 20.

2. பாலபண்டித பரீக்ஷையில் 1-வது பரிசு ரூ 70 பெறத்தக்க தங்கப்பதக்கம். 2-வது பரிசு ரூ 50. 3-வது பரிசு ரூ 30.

3. பண்டிதபரீக்ஷையில் 1-வது பரிசு ரூ 100 பெறத்தக்க தங்கத்தோடா. 2-வது பரிசு ரூ 70 பெறத்தக்க தங்கப் பதக்கம். 3-வது பரிசு ரூ 50.

V. பிரவேசபண்டித பரீக்ஷைக்கு 1 ரூபா வீதமும், பாலபண்டித பரீக்ஷைக்கு 2 ரூபா வீதமும், பண்டித பரீக்ஷைக்கு 3 ரூபா வீதமும் ஒவ்வொருவரும் செலுத்த வேண்டியதாகக் கட்டணத்தொகை விதிக்கப்பெற்றுள்ளன. இத்தொகையை இச்சங்கம் மானேஜ்மெண்டு ஆபீசுக்கு விண்ணப்பத்துடன் விசுவாவசு ஞு ஐப்பசி மீ முடிவுக்குள் மணியார்டர் மூலம் அனுப்பல்வேண்டும்,

VI. ஷை பரீக்ஷைகளிற் கீழ்ப்பரீக்ஷை தேறியே மேற் பரீக்ஷைக்கு வரவேண்டுமென்ற நியதியில்லை. ஆனால் ஒரு பரீக்ஷையில் தேர்ந்தவர் அதே பரீக்ஷைக்கு மறுமுறையும் வரல்கூடாது.

VII. பரீக்ஷாகாலத்தில் பெண்பாலர்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் தனித்தே செய்துகொடுக்கப் பெறும்.

VIII. இப்பரீக்ஷை விஷயத்தில் அன்புடன் வேண்டிய உதவிபுரிந்துவருமாறு இச்சங்கத்து வித்துவான்கள் வேண்டப்பெறுகிறார்கள்.

மதுரைத் தமிழ்ச்சங்கம் 1—9—05. } இங்ஙனம் பொ. பாண்டித்துரை, அக்கிராசனாதிபதி.

## சுதேசி எழுச்சி
(இரண்டாம் சங்கம்)

சனிக்கிழமை மாலை 5½-மணிக்கு ஹிந்துவித்தியாசாலையில் ஏறக்குறைய மாணவர்களும் மற்றையோருமாக ஐஞ்ஞூறு பேர் கூடினார்கள். மக-ா-ா-ஸ்ரீ எஸ். நாராயணசுவாமிஅய்யரவர்கள் பி.ஏ. பி.எல். சபாநாயகமாக வீற்றிருந்தனர். மக-ா-ா-ஸ்ரீ டி. ஆர். கணபதிராமய்யரவர்கள் பி.ஏ. பி.எல். சுதேசி எழுச்சியினாற் போதரும் பயன்களைப்பற்றிச் சிறிது பேசி, இராசாங்கத்தார் சுதேச வியாபார விருத்தியில் ஊக்கமின்றி வாளாவிருத்தலின், நம்மனோர் முயற்ச்சி மிக்கு உழைத்தல் கடனாமென்று கூறினார்.

மக-ா-ா-ஸ்ரீ ஜி. இராமச்சந்திரய்யரவர்கள் பி.ஏ. பி.எல். முற்கூறிய அபிப்பிராயத்தை வற்புறுத்தினதுமன்றி, சுதேசவர்த்தக விஷயமாகப் பண்டசாலைகள் ஏற்படுத்தவேண்டுவது அத்தியாவசியகமாம் என்று கூறி முடித்தார். மக-ா-ா-ஸ்ரீ எ. ஆர். கிருஷ்ணஅய்யரவர்கள் பி.ஏ. பி.எல். தேசமெங்கணும் கைத்தொழிற் சாலைகள் ஏற்படுத்துவதனாற் பெறப்படு நற்பயன்களைச் சிறப்பொடு பிரஸ்தாபித்தனர். பின்னர் மக-ா-ா-ஸ்ரீ ஸாது கணபதிஅய்யரவர்கள் பி.ஏ. பி.எல். எழுந்து, மற்றையோர் எடுத்துரைத்த கூற்றுக்களைத் தாம் ஒப்புக்கொண்டு, பெங்காளத்தில் மாணவர்கள் சட்டதிட்டங்களை விட்டு அவற்றை அசட்டைசெய்து ஒழுங்குமாறு போலன்றி, நமது தற்காப்பு நியமமானது, நம இராஜபக்தியானது மாறுவண்ணம் நடந்துகொள்வதே மிகச்சால்புடைத்து என விரித்துரைத்தார். கடைசியாக மக-ா-ா-ஸ்ரீ இராமஸ்வாமி அய்யங்காரவர்கள் பி.ஏ. பி.எல் அவைகட்கெல்சிலோர் வேண்டுகோட்கிணங்கித் தமிழ்மொழியில் சிறிதுநேரம் உபந்யசித்தனர். இனிய உபந்யாஸங்களேயன்றித் தம் உறுதியான செய்கைகள் தாம் இச்சங்கத்தின் ஒரு தலையான நோக்கம் என்று தம் கருத்தை வெளியிட்டார்கள். சபாநாயகரவர்கள் இத்தகைய முயற்சியானது நம்மனோர் ஐக்கியத்திற்கு இன்றியமையாததென்றுகூறி, சுதேசவாணிபம், கைத்தொழில் ஆதியன ஆதரிப்பால் வளர்ந்தோங்கி, நாடுசெழித்து நாடாகுமென்று தெளிவித்து முடிவு கட்டினார்கள்.

சபாநாயகரவர்களுக்கு வந்தனங்கள் தந்தபின் சபை கலைந்தது.

பி. ஸ்ரீநிவாசன்,
எட்டாவதுவகுப்பு, ஹிந்துவித்தியாசாலை, திருநெல்வேலி

## பத்திராதிபர் குறிப்பு.

திருநெல்வேலி பிட்டாபுரத்தி யம்மை கோயிலில் நவராத்திரி மஹோத்ஸவம் இரண்டு மூன்று வருஷங்களாக மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது. விஜயதசமியிலே பலவிதமான காட்சிகள் காட்டப்படுகின்றன. இதற்குமுன், மஹமதியர் கொண்டாடும் மொகரம்பண்டிகையிலே பற்பலவேடம்பூண்டும், சிலம்ப, வித்தைகள் காட்டியும் வந்தஇந்துக்கள் பலர் அங்குப்போவதை நிறுத்தி இங்கிந் நவராத்திரி மஹோத்ஸவம் விசேடமாய் நடைபெறத் தொடங்கியதுமுதல் அச்செயல்களை இங்கேயே செய்துவருகின்றார்கள் இது வியக்கத்தக்கதேயாம். இதற்கு வழிகாட்டியாயிருந்தது இந்நகரின் கீழ்த்திசையிலே உள்ள பாளையங் கோட்டையேயாம்; இதுவும், வீரராகவபுரம் முதலியவற்றிற்கு வழிகாட்டியென்று எண்ணுகிறோம். இப்படியே இங்குப் பல இடங்களிலும் நடைபெறத்தொடங்கிவிட்ட படியால் இங்கு நடைபெறும் மொகரம்பண்டிகை முன்போல அவ்வளவு விசேடமாக நடைபெறுவதாய்த் தெரியவில்லை. இன்னும் இந்துக்களிற் சிலர் அம்மொகரம் பண்டிகைக்குப் போய் வேடம்பூணல் விளையாடுதல் முதலிய செயல்களைத் தமது மார்க்கவிரோதமென அறிந்து முழுவதும் நிறுத்திவிடுதல் நலமென நினைக்கின்றோம். இனிவரும் வருடங்களிலாவது "மகிடாசுரசம்ஹார" த்தை ஓர் நாடகமாக நடித்துக்காட்டினால் ஜனங்களுக்கு மிகப் பயன்படுமென் றெண்ணுகிறோம். இதனைக் குறித்த மஹோத்ஸவத்தை முன்னின்று நடாத்தும் காரிய நிர்வாகிகளாகிய மக-ா-ா-ஸ்ரீ நமசிவாயம்பிள்ளையவர்கள் முதலியோர்கள் கவனிக்க வேண்டுகின்றோம்.

இம்மஹோத்ஸவத்தின் பொருட்டு திருநெல்வேலி சிவதேவஸ்தானத்திலிருந்து வருடமொன்றிற்கு ரூ 50 வீதம் உதவிசெய்ய முன்வந்திருப்பதாகக் கேட்டுச் சந்தோஷிக்கிறோம்.

"திருநாவுக்கரசுவளர் திருத்தொண்டி னெறிவாழ்க."
திருச்சிற்றம்பலம்.

Printed and published by M. Draviam Pillai,
Aryaprakasini Press, Tinnevelly B. 14—10—05

ன் பக்குவாபக்குவங்களும் நோக்கி வேண்டப்பட், டவ்வவ்வுயிர்கட் கின்றியமையாதனவாய்த் தெய்வசம்மதமாகவே நடை பெறுவன எனவும், அவ்வச்சமயத்தின் இயல்புக்கும், அவ்வச் சமயிகளின் உண்மைக்கும், அறிவுக்கும், அன்பிற்கும், நம்பிக்கைக்குந் தக்கபடியே அவ்வர்க்கங்கே தெய்வம் அருள்செய்யுமெனவும், ஆதலால் ஒன்றையும் இகழலாகாதெனவும் கொள்ளப்படும். சமயவாதிகள், தெய்வசம்மதமாய்த் தத்தமக்கு எது எது நல்லசமயம் என்று தோற்றுமோ, அதை அதையே அவரவர்கள் கொண்டொழுகுவார்கள் என்பதும், அவர்கள் தாம் தாம் கொண்ட சமயமே தத்தமக்கு மெய்ச்சமயமாகத் தோற்றுமென்பதும், அவ்வச்சமயத்தையே அவ்வவர் பாராட்டுதல் முதலியன செய்வர் என்பதும், அங்ஙனம் செய்தல் உலகியற்கையேயாமென்பதும் அறிவுடையோர் யாரும் அறிந்தவிஷயந்தான். இது நிற்க.

எத்தனை சமயங்கள் எவ்வெத் தேசத்திலே எவ்வெக்காலத்திலே தோற்றினாலும், எவ்வெச்சமயம் எவ்வெச் சமயத்தோடு மாறுபட்டாலும், உண்மை என்பது எவ்விடத்தும், எக்காலத்தும், யார்க்கும் ஒன்றாகவும், நிலையுள்ளதாகவும், எத்தனை அல்லது எவ்வளவு பெரிய அலைகளாலும் அசைக்கமுடியாததாகவும், எப்பொழுதும் இருளின்றி ஒளிகான்று, இயற்கையிலேயே இன்பம் பெருக்குவதாயும், அருளூற்றெடுத்து, அகநெகவோங்கி, உடம்பையும் உயிரையும் ஒருங்கே உருக்குவதாயும், "வாத தர்க்கமிடு படிறருந் தலைவணங்கி"டும் பரமசாந்தமே தனக்குப் படிவமாகவுடைய பக்குவம் பழுத்த பரம கற்பகதருவாயுமிருக்கும்; உண்மையிலேயே பிறந்து, உண்மையிலேயே வளர்ந்து, உண்மையிலேயேதிளைத்து, உண்மையிலே நிலைபெறும் உண்மைப்பேறுடையார்க்கே, அது தன்னை உண்மையாகவே காட்டும்; மற்றவர்க்கு அது தன்னைக் காட்டிக்கொள்ளாது; உண்மையையே விரும்பி, அதன் பொருட்டுழைப்பவர்கள் யாரோ, அவர்கட்கே அது கிடைக்கத்தக்கதென்பது உண்மையேயாம். அவ்வாறன்றி மற்றெதன்பொருட்டாவது அதைத் தேடுபவர்க்கு அது வெகு தூரத்தே நிற்கும், அல்லது ஆழத்தே கிடக்கும். வழி தெரிந்தோரை அது தானாகவே அடைகின்றது. உள்ளதை உள்ளதாகவும், இல்லதை இல்லதாகவும், யார் நினைக்கவும் சொல்லவும் பழகுகின்றார்களோ, அவர்கட்கே அதை ஒரு வகையால் அல்லது பலவகையால் நினைக்கவும் சொல்லவும் கூடும்; உள்ளதை இல்லதாகவும், இல்லதை உள்ளதாகவும் நினைக்கவும் சொல்லவும் யார் பழகுகின்றார்களோ, அவர்கட்கு அதை நினைக்கவும் முடியாது, சொல்லவும் முடியாது; அறிந்தோர் சொன்னாலும் அவர்களால் அறியவுமுடியாது. ஆகலால் உண்மையை அறிய விரும்புவோர், உண்மையாகவே நினைக்கவும், உண்மையையே நினைக்கவும், உண்மையையே சொல்லவும், உண்மையாகவேபழகவேண்டும். உண்மையைச் சூரியனுக்கொ[illegible]ம். சூரியனைப்பார்த்தோர்க்கு அதனைப்பார்த்தபின் [illegible]க்க முடியாது; மற்றைய எல்லாம் [illegible] வேறுபொருளைப்பார்க்க வி[illegible]கொண்டே பார்க்கவேண்[illegible]கொண்டே பார்க்கவேண்டும்; வேறொன்றாற்பார்க்கமுடியாது; வேறொன்றாற் பார்த்தால், அப்படிப்பார்க்கப்பட்டபொருள் வேறொன்றாகவே தோற்றும், உள்ளபடி விளங்காது. அது போல உண்மையை அறியவேண்டுவோர் எப்பொருளிலும் எப்பொழுதும் அவ்வுண்மையையே பார்க்கவேண்டும்; அப்படிப்பார்ப்பதுதான் அறிவுடையோர் கடமை; அறிவுடையோர்க்கு எப்பொழுதும் எப்பொருளிலும் அவ்வுண்மைதான் தோற்றும், உண்மை அல்லாதது அவர்களறிவுக்குத்தப்பிவிடும். உண்மையறியாதவர்கட்கு முதல் முதல் அஃதல்லாததுதான் தோற்றும்; அது உண்மையல்லவென்று அவர்கட்குத்தோற்றுதல் மிகவும் அருமையாயிருக்கும்; தோற்றினால் அதைப்பற்றி விசாரிக்கப்புகுவார்கள்; அவ்விசாரணையிலே அவர்களியல்புக்குத்தக்கபடி நாலும் வரும்; அவ்வியல்புணர்ந்தோர் அவர்க் குண்மை உணர்த்துமுறையா லுணர்த்தித் தெளிவித்திடுவார்களேயன்றி, மனம் வருந்த மாட்டார்கள். உண்மையறியாதவர்களும் உண்மையுணர்ந்தவர்கள்போல வெளியே ஒழுகுகின்றார்கள். அவ்வொழுக்கமும் வேறு, உண்மையுணர்ந்தவர்களது ஒழுக்கமும் வேறு. அவ்விரண்டொழுக்கங்கட்கும் எவ்வளவோ வித்தியாசமுண்டு. அவ்விரண்டையும் ஒன்றென்று கொள்ளலாகாது; அவ்விரண்டாலும் ஒரே பயன் விளைதலும் இல்லை; வெவ்வேறு பயனே விளையும்; ஆகலால், உண்மையை உணர்ந்தே அதனைக்கடைப்பிடித்தொழுகுதல் வேண்டும்.

உண்மையுணர்ந்தோருடைய ஒழுக்கத்திலே உள்ள உண்மையைத் தெரிந்துகொள்ள வேண்டி,ஒருவன் அவர்களுடைய ஒழுக்கத்தில் உண்மைவிசாரித்தல்குற்றமல்ல. ஆனால் அவன் உள்ளபடி உண்மையையே விரும்பி, அதனையே அறிய ஒருப்படுவானாயின், அவனுக்கு அவ்வுண்மையே விளங்குமன்றி, வேறொன்றும் விளங்காதென்று முன்னமே சொன்னோம். அவன் அவ்வொழுக்கத்திலே குற்றமொன்றே காண்பானாயின், அவன் உள்ளபடிஉண்மையறியப் புகுந்தவனல்லன். உலகத்திலே உண்மையும் பொய்மையும் கலந்தேயிருக்கின்றன; அவற்றுட் பொய்மையைப் பொய்மையாகவே கண்டோன் அப் பொய்மையைத் தள்ளி மெய்மையைக் கொள்வ வேண்டுவதுதான். ஆனால் முதல்முதற் பொய்மையை அல்லது குற்றத்தைக் காண்பதைப் பார்க்கிலும், கண்டபின் அதனைப் பொய்மை அல்லது குற்றமென் றறிவதைப்பார்க்கிலும், அவ்வாறறிந்தபின் அவன் தானாக அதனைத் தள்ளுவதைப் பார்க்கிலும், உண்மையை உள்ளபடியறியவே, அப்பொய்மை அவ்வாறறிந்த வறிவுக்குத் தான் விஷயமாகாமலேயே நீங்கிவிடுமன்றோ? அவ்வாறு அது தானே நீங்கவிடுதல் நல்லமுறை யல்லவா? பொய்மையாவது குற்றமாவது நமக்குத் தெரியாமலேயிருக்கப்பழகுதல் நல்லதா? தெரிந்து பழகிக்கொண்டபின் நீக்க முயலுதல் நல்லதா? ஆகையாற் சமய வாதிகள் எச்சமயத்திலும், அல்லது எச்சமயத்தாரது ஒழுக்கத்திலும் முதல்முதற் குற்றங் காண்பதைவிட, அதிலுள்ள உண்மையை உணர்ந்துகொள்ள விரும்புதலே மிக நல்லதாம். அதிலே தான் ஆன்மலாபமிருக்கின்றது.

உ

## அபிப்பிராய பேதம்.
## Difference of opinion.

தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரருளிய திருக்குறள்களுள் ஒன்றாகிய "தெய்வந்தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யுமழை" என்னுந் திருக்குறளுடைய தாற்பரிய விஷயமாய்ச் சமீபத்தில் ஓர் சங்கை நேரிட்டது. அக்குறளின் பொருளாவது பிற தெய்வந் தொழாது தன் தெய்வமாகிய கொழுநனைத் தொழாநின்று துயிலெழுவாள் பெய்யென்று சொல்ல மழை பெய்யும் என்பதாம். தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் பிறதெய்வந் தொழாமல் கணவனையே தெய்வமாகத் தொழவேண்டுமென்று ஸ்திரி தர்மத்தை வற்புறுத்தும் பொருட்டே சந்தேகாஸ்பதத்துக் கிடங்கொடாமல் இருத்தற்பொருட்டும் தொழாஅள் என்பதில் மாத்திரை கொடுத்துங் கூறினர். அதையனுசரித்தே திராவிட மாபாடிய கருத்தாகிய ஸ்ரீ சிவஞான சுவாமிகள் முதுமொழிவெண்பாவிலும் இந்தக் கருத்தையே வெளிப்படையாகக் காட்டி யுபயோகப்படுத்தி யிருக்கின்றனர். 'மூவர் தடுப்பவுங்கொண் மூவைப் பணிகொண்டாயே வனசூயை சோமேசா — மேவுபிற "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யுமழை" என்னும் வெண்பாவினால் மும்மூர்த்திகளும் பிரத்தியக்ஷ தெய்வமாய் வந்து நேரிற்றடுத்தும் அவர்களின் சொல்லைச் சட்டை பண்ணாமலும் கணவனையே பெரிதாய்க் கருதியும் கணவனது பணிவிடையே செய்து தன்னுடைய கற்பின் பலத்தினாலே மழை பெய்யும்படி செய்திருக்கின்றாள் என்று வியக்தமான கதையிருக்கிறது. இன்னும் இப்படிப்போல வசிட்டர் பத்தினியாகிய அருந்ததி, *லோபாமுத்திரை முதலிய ரிஷிபத்தினிகளுடைய கதைகளும் இதற்குச் சான்றாக எடுத்துக் காட்டலாம். இதற்கு அநுசரணையாகவே தொண்டைமண்டல சதகத்திலும் ஓர் செய்யுள் "கூட்டுங்கரந்துங் கொழுநற்கல் லாமற் கொடிவெருவ வோட்டும்பொழுதுங் கரங்குவியாமுதட்டெற்கு மூட்டுஞ் சழற்கொரு முன்றினில் லார்கற்பு மூட்டியெரி மாட்டுந்திற மனைதோறு முண்டே தொண்டை மண்டலமே" கூறியிருக்கின்றனர். அச்செய்யுளின் முதலடியின் தாற்பரியமும் உத்தம ஸ்திரிகளின் லக்ஷணம் வாசலில் வற்றல் வடகம் காய வைத்திருந்தால் அதைப் பாதுகாக்க காக்கையை விரட்டுங் காலத்துங் கூடக் கையைத் தட்டி ஒட்டமாட்டார்கள் ஏனென்றால் கையிரண்டும் ஒன்றாகக் கூம்புதல் தங் கணவருக்கேயன்றிப் பிற தெய்வங்களுக்குங் கூட இல்லையாதலால் காக்கையைக் கம்பையெறிந்து விரட்டுவார்கள் என்பதையும் பின்னடியின் அர்த்தத்தையும் பார்த்தால் நன்றாக விளங்கும். இப்படிக்கெல்லாம் ஆதாரங்களும் வேண்டிய மட்டுமிருக்கப் பொய்யாமொழியாகிய திருக்குறளிலும் நாயனார் எல்லா மதஸ்தர்களுக்கும் பொருந்தும்படியாயும் சகல நீதியும் ஒரு அசைநிலை கூட வீணாயுபயோகப்படுத்தாமல் 1330 அருங்குறளிலும் லோகோபகாரமாய் விளங்கச் செய்திருக்கின்றனர். அப்படிக்கிருக்கச் சிலர் மட்டும் ஏதோ 'தெய்வந்தொழாஅள்' என்ற குறளின் கருத்து தொழாதாள் என்பதற்குப் பொருள் தெய்வத்தையுந் தொழலாம் கணவனையுந் தொழலாம் என்று பொருள் வருவித்துக்கொள்ளலாம் என்று துணிவாய்ச் சொல்லுகிறார்கள். அதற்குக் காரணம் என்னவென்று புலப்படவில்லை. அவர்கள் சொல்லும் பொருள் நூலிலுமில்லை. பரிமேலழகர் முதலிய உரையாசிரியர் உரையிலும் இல்லை. சிலநாட் கழிந்தபின்னர் தெய்வத்தைத்தொழ மறந்தாலுங்கூடஎன்று ஓர்த்தமிருக்கிறதென்று சொல்லுகிறார்கள். இந்தக்குறளில் தொழாஅள் என்றதற்கு தொழவே மாட்டாள் என்று வெளிப்படையாய் அர்த்தம் இருக்க இப்படியெல்லாஞ் சொல்வது பொருந்தாதென்று என்னுடைய அபிப்பிராயமிருக்கிறது.

அப்படிக்கிருக்கவும் இவர்கள் துணிந்துசொல்வதைப்பார்த்தால் சூரியனைச்சந்திரனென்றும் சந்திரனைச் சூரியனென்றும் சொல்வதையொக்கும். நான் ஏன் இவ்வளவு சொல்லவேணுமென்றால் சாதாரணமாய் அந்தக்குறளையாவது அதின் உரையையாவது பார்க்கிற சாதாரண அறிவுடையவர்க்கே வியக்தமாய்த் தெரியக்கூடியதாயிருக்க இந்த விபரீதத்தை நினைக்கும்பொழுது யானைபார்க்க வெள்ளெழுத்தா என்ற பழமொழியை நினைப்புண்டாக்குகின்றது. ஒருவனது சொந்தமாயுள்ள மனைவழக்கு நிலவழக்கு முதலானவைகளில் ஒருமுழத்தரைவா விஷயமாய் எவ்வளவோ பொருள் செலவுசெய்து ஐகோர்ட்டு (High Court) வரையும் வழக்குகள் தொடுக்கின்றது சகசமாயிருக்கிறதேதவிர இதுபோலும் தெய்வ நிந்தனை சாஸ்திர விபரீதார்த்தம் முதலியவற்றைக்கவனியாமல் அவரவர்கள் இஷ்டப்படியே வைத்துக்கொள்வது சரியல்லவென்று எனக்குத்தோற்றுவதாலும் இந்தக்குறளின் உண்மைப்பொருள் வெளிப்படவேணுமென்றும் ஆராமையிருப்பதாலும் எழுதலானேன். இங்ஙனம்.

N. சங்கரலிங்கம்பிள்ளை.

* இந்த இடத்திலே அகத்தியர் பத்தினியாகிய என்று விசேடித்தல் நலம். (ப—ர்)

---

உ

ஸ்ரீ வாகீச பரமசற்குருவே நம:

## முக்கியமான வேலை.

இனிய கருணை முகி லெம்பெருமான் முக்கட்
கனியமிர்த வாரியின்பக் கட்டி தனிமுதல்வன்
நித்தன் பரம னிமலனிறை வாய்நிறைந்த
சுத்தனமக் கென்றுந் துணை.

அநாதிமலமுத்த சித்துருவாகிய சிவபெருமான் ஒருவரே பரமபதி. ஆன்மாக்களாகிய நாமெல்லாம் அவருக்கு மீளாவடிமைகள். ஆன்மாக்கள் பிறப்பிறப்பிற்பட்டுழலுந்தன்மையையுடையவைகள். ஆதலால் இங்ஙன[illegible]
ப்பிறப்பென்னும் அல்லலுட்பட[illegible]
போக மனுபவித்தற்கு முக்யச[illegible]
பாடொன்றேயாம். இவ்வ[illegible]
வ்வாற்றானு முத்திசித்[illegible]
றவினைப்ப[illegible]